உ

திருச்சிற்றம்பலம்.

தளவாய்
மும்மணியந்தாதி

(தேவாரக்கோர்வை)

தளவாய் திருமலையப்ப முதலியார்.

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி.

1929.

(Copyright)

உ

சிவமயம்.

முத்தமிழ்விரவிய தேவாரத்தின் இனிமை
பெருமைகளை எனக்கு நன்குவிளக்கி
யருளியவர்களும் மெய்த்திருவந்துற்றாலும்
வெந்துயர்வந்துற்றாலும் ஒத்திருக்கும்
உள்ளத்துறவியுமான

உயர்திரு

நாகப்ப சுவாமியவர்களுக்கு

இப்புத்தகம்

அன்புரிமையாக்கப்பட்டது.

உ

திருச்சிற்றம்பலம்

தளவாய் மும்மணியந்தாதி

(தேவாரக்கோர்வை.)

பிரமபுரம். பண்-நட்டபாடை.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசி யென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.

—சம்பந்தர். 1.

சிதம்பரம். திருத்தாண்டகம்.

அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை யருமறையி னகத்தானை யணுவையார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத் திகழொளியைத் தேவர்கடங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக் கனகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

—அப்பர். 2.

வெண்ணெய்நல்லூர். பண்-இந்தளம்.

நாயேன்பலநாளு நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்தெய்த்தேன் பெறலாகா வருள்
பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெ நல்லூ
ரருட்டுறையுள்
ஆயா வுனக்காளாயினி யல்லேனெனலாமே.

—சுந்தரர். 3.

பண்-பியந்தைக் காந்தாரம்.

என்பொடுகொம்பொடாமை யிவை மார்பிலங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதிமத்தமாலை புனல்சூடி வந்தெனுளமே
புகுந்தவதனா
லொன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறு
முடனாய நாள்களவைதா
மன்பொடு நல்ல நல்லவவை நல்ல நல்லவடியா
ரவர்க்கு மிகவே.

—சம்பந்தர். 4

மறைக்காடு. திருத்தாண்டகம்.

வேலைசேர் நஞ்சமிடற்றான் கண்டாய் விண்டடவு
பூங்கயிலை வெற்பன்கண்டா
யாலைசேர் வேள்வியழித்தான் கண்டாயமரர் கடா
மேத்துமண்ணல் கண்டாய்
பாநெய்சேரானைஞ்சுமாடி கண்டாய் பருப்பதத்தான்
கண்டாய் பாவைமேனி
மாலையோர் கூறுடைய மைந்தன் கண்டாய் மறைக்
காட்டுறையுமணாளன்றானே.

—அப்பர். 5.

கடவூர் மயானம். பண்-பழம்பஞ்சுரம்.

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலை
போல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படை
சூழத்
திருமால் பிரமனிந்திரர்க்குந் தேவர் நாகர்தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரியபெருமா
னடிகளே.

—சுந்தரர். 6.

குற்றாலம். பண்-குறிஞ்சி.

அரவின் வாயின்முள்ளெயிறேய்ப் பவரும்பீன்று
குரவம்பாவை முருகமர்சோலைக் குற்றாலம்
பிரமனோடு மாலறியாத பெருமையெம்
பரமன்மேய நன்னகர்போலும் பணிவீர்காள்.

—சம்பந்தர். 7.

சிதம்பரம். பண்-கொல்லி.

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
யெத்தினாற் பத்திசெய்கேனென்னை நீ யிகழ
வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காண் பாணடியனேன் வந்தவாறே.

—அப்பர். 8.

கேதாரம். பண்-நட்டபாடை.

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
றாழாதறஞ் செய்ம்மின்றடங் கண்ணான் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான்றிருக்கேதாரமெனீரே.

—சுந்தரர். 9.

குற்றலம். பண்-காந்தாரம்.

திருந்தமதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவி
பாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல்
புரிந்த செல்வ
ரிருந்தவிடம் வினவிலேலங்கமழ்சோலையின வண்டி
யாழ்செய்
குருந்தமணநாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற்குறும்
பலாவே.

—சம்பந்தர். 10.

சிதம்பரம். பண்-கொல்லி.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்
சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற்பால்
வெண்ணீறும்
இனித்தமுடைய வெடுத்த பொற்பாதமுங் காணப்
பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.

—அப்பர். 11.

பண்-பழம்பஞ்சுரம்.

தேனைக்காவல்கொண்டு விண்டகொன்றைச்
செழுந்தாரய
வானைக்காவல்கொண்டு நின்றாறியா நெறியானே
யானைக்காவிலரனே பரனே யண்ணாமலையானே
யூனைக்காவல் கைவிட்டென்னை யுகப்பாருணர்வாரே.

—சுந்தரர். 12.

திருவண்ணாமலை. பண்-நட்டபாடை.

உண்ணாமுலையுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித் திரண்மழலைம்முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினைவழுவா வண்ண
மறுமே.

—சம்பந்தர். 13.

சிதம்பரம். திருக்குறுந்தொகை.

அன்னம்பாலிக்குந் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்கு மேலுமிப் பூமிசை
யென்னம்பாலிக்குமா று கண்டின்புற
வின்னம்பாலிக்குமோ விப்பிறவியே.

—அப்பர். 14.

வெண்ணெய்நல்லூர். பண் இந்தளம்.

பித்தாபிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளா யினியல்லேனெனலாமே.

—சுந்தரர். 15.

ஆலவாய். பண்-காந்தாரம்.

அருத்தமதாவது நீறு வவலமறுப்பது நீறு
வருத்தந்தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தமாவது நீறு புண்ணியர்பூசும் வெண்ணீறு
திருத்தகுமாளிகை சூழ்ந்ததிரு வாலவாயான் றிருநீறே.

—சம்பந்தர். 16.

ஆவடுதுறை. திருத்தாண்டகம்.

திருவே யென்செல்வமே தேனே வானோர் செழுஞ்
சுடரே செழுஞ்சுடர் நற்சோதிமிக்க
வுருவே யென்னுறவே யென்னூனே யூனின்னுள்
ளமே யுள்ளத்தினுள்ளே நின்ற
கருவே யென்கற்பகமே கண்ணே கண்ணிற் கரு
மணியே மணியாடுபாவாய் காவா
யருவாயவல்வினை நோயடையா வண்ணமாவடுதண்
டுறையுறையுமமரரேறே.

—அப்பர். 17.

திருப்புன்கூர். பண்-தக்கேசி.

ஏதநன்னில மீரறுவேலியேயர் கோனுற்றவரும்
பிணிதவிர்த்துக்
கோதனங்களின்பால் கறந்தாட்டக் கோலவெண்
மணற் சிவன்றன்மேற்சென்ற
தாதை தாளற வெறிந்த சண்டிக்குன் சடை மிசை
மலரருள் செயக்கண்டு
பூதவாளிநின் பொன்னடியடைந்தேன் பூம்பொழிற்
றிருப்புன் கூருளானே.

—சுந்தரர். 18.

திருநெல்வேலி. பண்-சாதாரி.

ஏனவெண் கொம்பொடு மெழிறிகழ்மத்தமுமிள
வரவுங்
கூனல்வெண்பிறை தவழ்சடையினர் கொல்புலித்
தோலுடையா
ராணினிலைந் துகந்தாடுவர் பாடுவருமறைக
டேனில் வண்டமர் பொழிற்றிருநெல்வேலியுறை
செல்வர்தாமே.
—சம்பந்தர். 19.

திருவாரூர். திருநேரிசை.

தாழ்குழலின் சொனல்லார் தங்களைத் தஞ்சமென்று
ஏழையேனாகி நாளுமென் செய்கேனெந்தை பெம்
மான்
வாழ்வதே லரிதுபோலும் வைகலுமைவர் வந்து
ஆழ்குழிப்படுத்த வாற்றேனாரூர் மூலட்டனீரே.
—அப்பர். 20.

திருப்புன்கூர். பண்-தக்கேசி.

மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரிலிருவர் நின்
றிருக்கோயிலின வாய்தல்
காவலாளரென்றேவிய பின்னை யொருவனீகரிகாட
ரங்காக
மானைநோக்கியோர் மாநடமகிழமணி முழாமுழக்க
வருள் செய்த
தேவ்தேவ நின் றிருவடி யடைந்தேன் செழும்பொழிற்
றிருப்புன் கூருளானே.
—சுந்தரர். 21.

திருக்கோடிக்கா. **பண்-நட்டராகம்.**

ஏணழிந்த வாழ்க்கையை யின்பமென்றிருந்து நீர்
மாணழிந்த மூப்பினால் வருந்தன் முன்னம் வம்மினோ
பூணல் வெள்ளெலும்பினான் பொன்றிகழ்சடைமுடிக்
கோணல் வெண்பிறையினான் கோடிகாவுசேர்மினே.

—*சம்பந்தர்.* 22.

கடவூர் வீரட்டம். **திருநேரிசை.**

சேலினேரனைய கண்ணார் திறம்விட்டுச் சிவனுக் காளாய்ப்
பாலுநற்றயிர் நெய்யோடு பலபல வாட்டி யென்றும்
மாலினைத்தவிர நின்ற மார்க்கண்டர்க்காகவன்று
காலனையுதைப்பர்போலுங் கடவூர் வீரட்டனாரே.

—*அப்பர்.* 23.

பண்-கொல்லிக்கௌவாணம்.

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கனடி யார்க்குமடியேன்
மடல்சூழ்ந்ததார் நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை மன்ன
வனாஞ் செருத்துணை தனடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதள் மேலரவாடவாடி பொன்ன
டிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்குமடியேன்
அடல் சூழ்ந்தவேல் நம்பி கோட்புலிக்குமடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மானுக்காளே.

—*சுந்தரர்.* 24.

திருவீழிமிழலை. பண்-மேகராகக்குறிஞ்சி.

ஆறாடு சடைமுடியனனலாடு மலர்க்கையனிமப்பப்
பாவை

கூறாடு திருவுருவன் கூத்தாடுங் குணமுடையோன்
குளிருங்கோயில்

சேறாடு செங்கழுநீர்த்தாதடி மதுவுண்டு சிவந்தவண்டு

வேறாய வுருவாகிச் செவ்வழி நற்பண்பாடு மிழலை
யாமே.

—சம்பந்தர். 25.

திருப்பூவணம். திருத்தாண்டகம்.

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றுமடியவர்கட்
காரமுதமாகித் தோன்றும்

ஊணாகவூர்திரிவானாகித் தோன்று மொற்றைவெண்
பிறை தோன்றும் பற்றார் தம்மேற்

சேணாகவரை வில்லாலெரித்த தோன்றுஞ்செற்ற
வர்தமெலும்பிறைச் செறியச் செய்த

பூணாணு மரைநாணும் பொலிந்து தோன்றும் பொழி
றிகழும் பூவணத்தெம்புனிதனார்க்கே.

—அப்பர். 26.

பண்-பழம் பஞ்சுரம்.

புலியூர் சிற்றம்பலத்தாய் புகலூர்ப் போதாமூதூரா
பொலிசேர்புர மூன்றெரியச்செற்றபுரிபுன்சடை
யானே
வலிசேராக் கன்றடக்கையைஞ்ஞான்கடர்த்த மதி
சூடி
கலிசேர்புறவிற் கடவூராளீகாணவருளாயே.

—சுந்தரர். 27.

பண்-கௌசிகம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொருளாவது
நாதனும நமச்சிவாயவே.

—சம்பந்தர். 28.

திருக்குறுந்தொகை.

வேதமோதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல் பல நித்தல் பயிற்றிலென்
ஓதியங்கமோராறு முணரிலென்
ஈசனையுள்குவார்க்கன்றி யில்லையே.

—அப்பர். 29.

பாண்டிக்கொடுமுடி. பண்-பழம் பஞ்சுரம்.

இட்டனும்மடி யேத்துவாரி கழ்ந்திட்ட நாண்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலாற்கரு தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநாநமச் சிவாயவே.

—சுந்தரர். 30.

பண்-பியந்தைக் காந்தாரம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெனுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே.

—சம்பந்தர். 31

திருக்கடம்பூர். **திருக்குறுந்தொகை.**

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்கடன் னடியேனையுந் தாங்குத
லென்கடன் பணி செய்து கிடப்பதே.

—அப்பர். 32.

நாகைக்காரோணம். பண் கொல்லிக்கௌவாணம்.

பத்தூர் புக்கிரந்துண்டு பலபதிகம்பாடிப் பாவைய
ரைக்கிறி பேசிப்படிறு டித்திரிவீர்
செத்தார்மெலும் பணிந்து சேவேறித்திரிவீர் செல்
வத்தை மறைத்துவைத்தீரெனக்கொருநாளிரங்கீர்
முத்தாரமிலங்கிமிளிர்மணி வயிரக்கோவையவை
பூணத்தந்தருளி மெய்க்கினிதாநாறுங்
கத்தூரிகமழ் சாந்து பணித்தருளவேண்டும் கட
நாகைக்காரோணமேவியிருந்தீரே.

—சுந்தரர். 33.

திருவையாறு. **பண்-மேகராகக்குறிஞ்சி.**

கங்காளர் கயிலாய மலையாளர்கானப் பேராளர்மங்கை
பங்காளர்திரிசூலப்படையாளர் விடையாளர் பயிலுங்
கோயில்
கொங்காளப் பொழினுழைந்து கூர்வாயாலிறகுலர்த்
திக்கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகுபைங்கானலிரைதேருந்
திருவையாறே.

—சம்பந்தர். 34.

திருத்தாண்டகம்.

திருநாமமஞ் செழுத்துஞ் செப்பாராகிற் றீவண்ணர்
திறமொருகாற் பேசாராகி
லொருகாலுந் திருக்கோயில் சூழாராகிலுண்பதமுன்
மலர் பறித்திட்டுண்ணாராகி
லருநோய்கள் கெட வெண்ணீறணியாராகிலளி
யற்றார் பிறந்தவாறேதோவென்னிற்
பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகியிறக்கின்றாரே.

—அப்பர். 35.

திருப்புன்கூர். பண்-தக்கேசி.

இயக்கர் கின்னரர் ஞமனோடு வருணரியங்கு தீவளி
ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலிவானரநாகம் வசுக்கள் வானவர்தானவ
ரெல்லாம்
அயர்ப்பொன்றின்றி நின்றிருவடியதனை யர்ச்சித்தார்
பெருமாரருள் கண்டு
இசைப்பொன்றின்றி நின்றிருவடியடைந்தேன்
செழும் பொழிற்றிருப்புன்கூருளானே.

—சுந்தரர். 36.

திருக்கோவலூர். பண் நட்டராகம்.

ஏதமிக்க மூப்பினோடிருமலீளையென்றிவை
யூதலாக்கை யோம்புவீருறுதியாவதறிதிரேற்
போதில் வண்டுபண்செயும் பூந்தண் கோவலூர்தனுள்
வேதயோது நெறியினான் வீரட்டானஞ்சேர்துமே.

—சம்பந்தர். 37.

அண்ணாமலை. திருக்குறுந்தொகை.

வீரனைவிட முண்டனைவிண்ணவர்
தீரனைத்திருவண்ணா மலையனை
யூரனையுணரார் புரமூன்றெய்த
வாரனையடியேன் மறந்துய்வனோ.

—அப்பர். 38.

கொடுமுடி பண்-பழம் பஞ்சுரம்.

மற்றுப்பெற்றெனக் கின்றிநின்றிருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச் சிவாயமே.

—சுந்தரர். 39.

சிராப்பள்ளி. பண்-குறிஞ்சி.

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாகமுடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங்குளிருமே.

—சம்பந்தர். 40.

சேறை. திருக்குறுந்தொகை.

குலங்களென்செய்வகுற்றந்தானென்செய்வ
துலங்கிநீ நின்று சோர்ந்திட னெஞ்சமே
யிலங்கு சேறையிற் செந்நெறிமேவிய
அலங்கனுருளரஞ்சுவ தென்னுக்கே.

—அப்பர். 41.

திருப்புன்கூர். பண் தக்கேசி.

அந்தணாளனுன்னடைக்கலம் புகுதவவனைக் காப்பது
காரணமாக
வந்தகாலன்றனுருயிரதனை வவ்வினாய்க் குன்றன்
வண்மைகண்டடியே
னெந்தை நீ யெனை நமன்றமர்நலியிலிவன்மற்
றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன்றிருவடி யடைந்தேன் செழும்
பொழிற்றிருப்புன்கூருளானே.

—சுந்தரர். 42.

சிதம்பரம். பண்-குறிஞ்சி.

செல்வநெடுமாடஞ்சென்று சேணோங்கிச்
செல்வமதிதோயச் செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ் தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ்செல்வமே.

—சுந்தரர். 43.

திருவையாறு. பண்-பழந்தக்கராகம்.

செம்பவளத் திருவுருவர் திகழ்சோதிக்குழைக்காதர்
கொம்பமருங்கொடிமருங்கிற் கோல்வளையாளொருபாகர்
வம்பவிழுமலர்க்கொன்றை வளர்சடைமேல் வைத்துகந்த
அம்பவளவையாறர்க்காளாய் நானுய்ந்தேனே.

—அப்பர். 44.

திருநாவலூர். பண் நட்டராகம்.

உம்பரார்கோனைத் திண்டோள்முரித்தாருரித்தார்களிற்றை
செம்பொனார் தீவண்ணர்தூவண்ண நீற்றரோராவணத்தால்
எம்பிரானார் வெண்ணெய்நல்லூரில் வைத்தென்னையாளுங் கொண்ட
நம்பிரானார்க்கிடமாவது நந்திருநாவலூரே.

—சுந்தரர். 45

மறைக்காடு. பண்-பியந்தைக் காந்தாரம்.

நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கு மத்தாகப்
பாகந் தேவரோடசுரர் படுகடலளறெழக்கடைய
வேகஞ்செழவாங்கே வெருவொடிமிரிந்தெங்கு
மோட
வாகந்தன்னில்வைத் தமிர்தமாக்குவித்தான் மறைக்
காடே.

—சம்பந்தர். 46.

ஆவடுதுறை. திருநேரிசை.

மஞ்சனே மணியுமானாய மரகதத்திரளுமானாய்
நெஞ்சுளே புகுந்துநின்று நினைதருநிகழ்வினானே
துஞ்சும்போதாகவந்து துணையெனக்காகிநின்றம்
அஞ்சலென் றருளவேண்டு மாவடுதுறையுளானே.

—அப்பர். 47.

காஞ்சிபுரம். பண்-தக்கேசி.

ஆலந்தானுகந் தமுதுசெய்தானை யாதியை யமரர்
தொழுதேத்துஞ்
சீலந்தான் பெரிதுமுடையானைச் சிந்திப்பாரவர்
சிந்தையுளானை
யேலவார் குழலாளுமைநங்கையென்று மேத்தி
வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பனெம்மானைக் காணக்கண்ணடி
யேன்பெற்றவாறே.

—சுந்தரர். 48.

திருப்பள்ளி பண்-பியந்தைக் காந்தாரம்

பெறுமலர்கொண்டு தொண்டர்வழிபாடுசெய்ய
வொழிபாடிலாத பெருமான்
கருமலர் கண்டமாக விடமுண்ட காலையிடமாயகாத
நகர்தான்
வெறுமலர் தொட்டுவிட்ட விசைபோனகொம்பின்
விடுபோதலர்ந்தவிரைசூழ்
நறுமலரல்லிபுல்லி யொலிவண்டுறங்கு நனிபள்ளி
போலுநமர்காள்

—சம்பந்தர். 49.

திருத்தாண்டகம்.

நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி நலஞ்சுடரே
நால்வேதத்தப்பானின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்துநின்ற சொலற்
கரிய சூழலாயிதுவுன் றன்மை
நிற்பதொத்து நிலையிலாநெஞ்சந் தன்னுணில்லாத
புலாலுடம்பே புகுந்துநின்ற
கற்பகமே யானுன்னை விடுவேனல்லேன் கனமா
மணிநிறத்தெங்கடவுளானே.

—அப்பர். 50.

திருப்புகலூர். பண்-கொல்லி.

கற்றிலாதானைக் கற்றுநல்லனே காமதேவனை
யொக்குமே,
முற்றிலாதானை முற்றனேயென்று மொழியினுங்
கொடுப்பாரிலைப்
பொத்திலார்ந்தைகள் பாட்டரூப்புகலூரைப்பாடுமின்
புலவீர்காள்
அத்தனையமருகலகமாள்வதற் கியாதுமையுற
வில்லையே.

—சுந்தரர் 51.

ஆவடுதுறை. பண்-காந்தாரபஞ்சமம்.

இடரினுந்தளரினு மெனதுறுநோய் தொடரினுமுன்
கழற்றொழுதெழுவேன்
கடறனிலமுதொடு கலந்த நஞ்சை மிடறினிலடக்கிய
வேதியனே
யிதுவோவெமையாளுமா றீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே.

—சம்பந்தர். 52.

மாற்பேறு. திருக்குறுந்தொகை.

ஏதுமொன் றுமறிவிலராயினும்
ஓதியஞ்செழுத்து முணர்வார்கட்குப்
பேதமின்றியவரவருள்ளத்தே
மாதுந்தாமு மகிழ்வர்மாற்பேறரே.

—அப்பர். 53.

கலையநல்லூர். **பண்-தக்கராகம்.**

மாலயனுங்காண்பரிய மாலெரியாய் நிமிர்ந்தோன்
வன்னிமதி சென்னிமிசை வைத்தவன் மொய்த்
தெழுந்த
வேலைவிடமுண்ட மணிகண்டன் விடையூறுவிமல
னுமையவளோடு மேவியவூர் வினவிற்
சோலைமலிகுயில்கூவக் கோலமயிலாலச்சுரும்பொடு
வண்டிசைமுரலப்பசுங்கிளி சொற்றுதிக்கக்
காலையிலுமாலையிலுங் கடவுளடிபணிந்து கசிந்த
மனத்தவர்பயிலுங் கலையநல்லூர்காணே.

—சுந்தரர். 54.

திருவாலவாய். **பண்-காந்தாரம்.**

காணவினியது நீறு கவினைத்தருவது நீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவது நீறு மதியைத்தருவது நீறு
சேணந்தருவது நீறு திருவாலவாயான்றிருநீறே.

—சம்பந்தர். 55.

அதிகை வீரட்டம். **திருநேரிசை.**

நீதியால் வாழ மாட்டேனித்தலுந் தூயனல்லேன்
ஓதியுமுணர மாட்டே னுன்னையுள் வைக்க மாட்டேன்
சோதியே சுடரேயுன்றன் றூமலர்ப்பாதங்காண்பான்
ஆதியே யலைந்துபோனே னதிகைவீரட்டனீரே.

—அப்பர். 56.

திருவாரூர். **பண்-புறநீர்மை.**

அந்தியுநண்பகலு மஞ்சுபதஞ்சொல்லி
முந்தியெழும் பழைய வல்வினைமூடாமுன்
சிந்தை பராமரியாத்தென் றிருவாரூர்புக்
கெந்தைபிரானாரை யென்றுகொலெய்துவதே.

—சுந்தரர். 57.

அண்ணாமலை. **பண்-நட்டபாடை.**

தேமாங்கனிகடுவன்கொள்ள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துருவன்மிசை சிறுநுண்டுளி சிதற
வாமாம்பிணையணையும் பொழிலண்ணாமலையண்ணல்
பூமாங்கழல்புனைசேவடி நினைவார்வினையிலரே.

—சம்பந்தர். 58.

திருவாரூர். **திருத்தாண்டகம்.**

இடர்கெடுமா றெண்ணுதியே னெஞ்சேநீவா விண்
டொளிசேர் கங்கைச்சடையாயென் றுஞ்
சுடரொளியா யுள்விளங்கு சோதியென்றுந் தூநீறு
சேர்ந்திலங்கு தோளாயென் றுங்
கடல்விடம துண்டிருண்ட கண்டாவென் றுங்
கலைமான்மறியேந்து கையாவென் றும்
அடல்விடையா யாரமுதே யாதியென்று மாரூரா
வென்றென்றே யலறுநில்லே.

—அப்பர். 59.

கற்குடி. **பண்-நட்டராகம்.**

நிலனே நீர்வெளிதீநெடுவானகமாகி நின்ற
புலனே புண்டரீகத்தயன்மாலவன் போற்றிசெய்யுங்
கலனே கற்பகமே திருகற்குடி மன்னிநின்ற
அனல்சேர்கையினனே யடியேனையுமஞ்சலென்னே.

—சுந்தரர். 60.

வலஞ்சுழி. **பண்-நட்டராகம்**

என்ன புண்ணியஞ்செய்தனை நெஞ்சமேயிருங் கடல்
வையத்து
முன்னைநீ புரிநல்வினைப்பயனிடை முழுமணித்
தரளங்கண்
மன்னுகாவிரிசூழ் திருவலஞ்சுழிவாணனை வாயாரப்
பன்னியாதரித்தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே.

—சம்பந்தர். 61.

திருத்தாண்டகம்.

நாமார்க்குங்குடியல்லோ நமனையஞ்சோ நரகத்தி
விடர்ப்படோ நடலையில்லோ
மேமாப்போம்பிணியறியோம் பணியோமல்லோ
மின்பமேயென் னாளுந் துன்பமில்லை.
தாமார்க்குங்குடியல்லாத் தன்மையான சங்கவெண்
குழையோர்காதிற்
கோமாற்கே நாமென் றுமீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்
சேவடியிணையேகுறுகி னோமே.

—அப்பர். 62.

கலையநல்லூர். பண்-தக்கராகம்.

குரும்பைமுலைமலர்க்குழலிகொண்ட தவங்கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவடன் குணத்தினை
நன்கறிந்து
விரும்பும் வரங்கொடுத்தவளை வேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர்
வினவில்
அரும்பருகேசுரும்பருவ வறுபதம்பண்பாட வணி
மயில்கணடமாடுமணிபொழில் சூழயலின்
கரும்பருகே கருங்குவளைகண் வளருங் கழனிக்கமலங்
கண் முகமலருங் கலையநல்லூர்காணே.

—சுந்தரர். 63.

சீகாழி. பண்-காந்தாரபஞ்சமம்.

காவியங்கருங்கண்ணிஞள் கனித்தொண்டைவாய்
கதிர்முத்தநல்வெண்ணகை
தூவியம்பெடை யன்னநடைச்சுரிமென்குழலா
டேவியுந் திருமேனியோர்பாகமா யொன்றிரண்
டொரு மூன்ருெடுசேர்பதி
பூவிலந்தணஞெப்பவர் பூந்தராய் போற்றுதுமே.

—சம்பந்தர். 64.

இன்னம்பர். திருவிருத்தம்.

போற்றந்தகையன பொல்லாமுயலகன் கோபப்
புன்மை
யாற்றந்தகையனவாறு சமயத்தவரவரைத்
தேற்றந்தகையன தேறியதொண்டரைச் செந்
நெறிக்கே.
யேற்றந்தகையன வின்னம்பரான்றனிணையடியே.

—அப்பர். 65.

பண்-கொல்லிக்கௌவாணம்.

இலைமலிந்தவேல்நம்பி யெறிபத்தர்க்கடியேன் ஏனாதி
நாதன்ற னடியார்க்குமடியேன
கலைமலிந்தசீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன் கடவூரிற்
கலயனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளல் மானக்கஞ்சாற னெஞ்சாத
வாட்டாயனடியார்க்குமடியேன்
அலைமலிந்த புனல் மங்கையானாயர்க்கடியேன் ஆரூரன்
ஆரூரிலம்மானுக்காளே.

—சுந்தரர். 66,

சிதம்பரம். காந்தாரபஞ்சமம்.

ஆடினாய் நறுநெய்யொடுபாறயிரந்தணர் பிரியாத
சிற்றம்பல
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும் பல்சடைப்பனி
கால் கதிர்வெண்டிங்கள்
சூடினாயருளாய் சுருங்கவெந்தொல்வினையே.

—சம்பந்தர். 67.

சிதம்பரம். பண்-கொல்லி

தொடுத்தமலரொடு தூபமுஞ் சாந்துங் கொண்டெப்
பொழுதும்
அடுத்துவணங்கு மயனொடுமாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண்டணிந்து பொன்னாகிய தில்லைச்சிற்
றம்பலவன்
உடுத்ததுகில்கண்ட கண்கொண்டு மற்றினிக்காண்ப
தென்னே.

—அப்பர். 68.

கொடுமுடி. பண்-பழம்பஞ்சுரம்.

எல்லையில் புகழெம்பிரானெந்தை தம்பிரானென்
பொன்மாமணி
கல்லையுந்தி வளம்பொழிந்திழிகாவிரி யதன்வாய்க்
கரை.
நல்லவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக்
கொடுமுடி
வல்லவாவுனை நான் மறக்கினுஞ்சொல்லுநா நமச்
சிவாயவே.

—சுந்தரர். 69

ஆக்கூர். பண்-சீகாமரம்

வாளார்கண்செந்துவர்வாய் மாமலையான்றன் மடந்தை
தோளாகம்பாகமாப் புல்கினான்றொல்கோயில்
வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான்மிக்கிருக்குந்
தாளாளராக் கூறிற்றான்றோன்றிமாடமே.

—சம்பந்தர். 70.

திருக்குறுந்தொகை.

மாசில்வீணையு மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலு
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடிநீழலே.

—அப்பர். 71.

கோளிலி. பண்-நட்டராகம்.

நீளநினைந்தடியேனுமை நித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள் வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான் குண்டையூர்ச்சிலநெல்லுப்
பெற்றே
னாளிலை யெம்பெருமானவையட்டித்தரப்பணியே.

—சுந்தரர். 72..

கோடிகா. பண்-நட்டராகம்.

பண்டுசெய்த வல்வினை பற்றறக்கெடும்வகை
யுண்டுமக்குரைப்பனா னொல்லைநீரெழுமினோ
மண்டுகங்கை செஞ்சடைவைத்து மாதோர்பாகமாக்
கொண்டுகந்தமார்பினான் கோடிகாவுசேர்மினே.

—சம்பந்தர். 73.

புறம்பயம். திருத்தாண்டகம்.

கோவாயவிந்திரனுள்ளிட்டாராகக் குமரனும் விக்கின
விநாயகனும்
பூவாயபீடத்துமேலயனும் பூமியளந்தானும் போற்
றிசைப்பப்
பாவாயவின்னிசைகள் பாடியாடிப் பாரிடமுந்தாமும்
பரந்துபற்றிப்
பூவார்ந்தகொன்றை பொறிவண்டார்க்கப்புறம்பய
நம்மூரென்றுபோயினாரே.

—அப்பர். 74.

திருவாரூர். பண்-இந்தளம்.

ஊன்மிசையுதிரக்குப்பையொரு பொருளிலா
தாமாயம்
மான்மறித்தனையநோக்கி மடந்தைமார் மதிக்குமிந்த
மானுடப்பிறவி வாழ்வுவாழ்வதோர் வாழ்வு
வேண்டேன்
ஆனல்வெள்ளேற்றவாரூரப்பனே யஞ்சினேனே.

—சுந்தரர். 75.

திருக்கானப்பேர். பண்-கொல்லி.

சிலையினான் முப்புரந் தீயெழச்செற்றவ
னிலையிலாவிருவரை நிலைமை கண்டோங்கினான்
கலையினார் புறவிற்றேன் கமழ்தருகானப்பேர்
தலையினால் வணங்குவார் தவமுடையார்களே.

—சம்பந்தர். 76.

செங்காட்டங்குடி. திருத்தாண்டகம்.

உருகுமனத்தடியவர்கட் கூறுந்தேனை யும்பர் மணி
முடிக்கனியை யுண்மைநின்ற
பெருகுநிலைக்குறியாள ரறிவுதன்னைப் பேணியவந்த
ணர்க்குமறைப்பொருளைப் பின்னு
முருகுவிரிநறுமலர் மேலயற்குமாற்கு முழுமுதலை
மெய்த்தவத்தோர் துணையைவாய்த்த
திருகுகுழலுமைநங்கை பங்கன்றன்னைச் செங்காட்
டங்குடியதனிற் கண்டேனே.

—அப்பர். 77.

திருக்காளத்தி. பண்-நட்டராகம்.

செஞ்சேலன்னகண்ணார் திறத்தே கிடந்துற்றலறி
நஞ்சேனடியே னலமொன்றறியாமையினாற்
றுஞ்சேனொருகாற்றொழுதேன் றிருக் காளத்தியா
யஞ்சாதுன்னையல்லா லறிந்தேத்தமாட்டேனே.

—சுந்தரர். 78.

திருவாலவாய். **பண்கொல்லி.**

மானினேர்விழிமாதராய் வழுதிக்குமாபெருந்
தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவனென் றுநீபரி
வெய்திடே
லானைமாமலை யாதியாயவிடங்களிற் பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே.
—சம்பந்தர். 79.

திருநேரிசை.

அங்கத்தை மண்ணுக்காக்கி யார்வத்தையுனக்கேதந்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமா
நின்னை
சங்கொத்த மேனிச்செல்வா சாதனாளேனுன்னை
யெங்குற்றாயென்போதாலிங்குற்றேனென்
கண்டாயே.
—அப்பர். 80.

மழபாடி. **பண்-நட்டராகம்.**

கண்ணா யேழுலகுங்கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணாரின் தமிழாய்ப் பரமாயபரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள்மாணிக்கமே
யண்ணா நின்னையல்லா லினியாரைநினைக்கேனே.
—சுந்தரர். 81.

நெடுங்களம். பண்-பழந்தக்கராகம்.

நின்னடியே வழிபடுவானிமலா நினைக்கருத
வென்னடியா னுயிரைவவ்வேலென்டற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கு
நின்னடியாரிடர்களையாய் நெடுங்களமேயவனே.

—சம்பந்தர். 82.

பண்-காந்தாரம்.

இல்லகவிளக்கது விருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே.

அப்பர். 83.

திருவாலங்காடு. பண்-பழம்பஞ்சுரம்.

வேலங்காடுதடங்கண்ணார் வலையுட்பட்டுன்னெறி
மறந்து
மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே
மரகதமே.
பாலங்காடி நெய்யாடி படர்புன்சடையாய் பழைய னூர்
ஆலங்காடா வுன்னடியார்க்கடியேனாவேனே.

—சுந்தரர். 84.

திருவாலங்காடு. பண்-பழம்பஞ்சுரம்.

வேலங்காடு தடங்கண்ணார் வலையுட்பட்டுன் னெறி
மறந்து
மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே
மரகதமே
பாலங்காடி நெய்யாடி படர்புன்சடையாய் பழைய
னூர்
ஆலங்காடா வுன்னடியார்கடியே னாவேனே.

—சுந்தரர். 84.

திருவெண்காடு. பண்-சீகாமரம்.

வேலைமலிதண்கானல் வெண்காட்டான் றிருவடிக்கீழ்
மாலைமலிவண் சாந்தால் வழிபடுநன்மறையவன்றன்
மேலடர்வெங்காலனுயிர் விண்டபினை நமன்றூத
ராலமிடற் றானடியா ரென்றடரவஞ்சுவரே.

—சம்பந்தர். 85.

நின்றியூர். திருக்குறுந்தொகை.

அஞ்சியாகிலு மன்புபட்டாகிலு
நெஞ்சம் வாழிநினை நின்றியூரை நீ
யிஞ்சிமா மதிலெய்திமையோர்தொழக்
குஞ்சிவான்பிறை சூடிய கூத்தனே.

—அப்பர். 86.

எதிர்கொள்பாடி. பண்-இந்தளம்.

கூசநீக்கிக் குற்றநீக்கிச் செற்றமனநீக்கி
வாசமல்குகுழலினார்கள் வஞ்சமனைவாழ்க்கை
யாசைநீக்கி யன்புசேர்த்தி யென்பணிந்தேறே
றீசர்கோயிலெதிர்கொள்பாடி யென்பதடைவோமே.
—சுந்தரர். 87.

சீகாழி. பண்கொல்லி.

அடைவிலோமென்று நீயயர்வொழிநெஞ்சமே
விடையமர்கொடியினான் விண்ணவர்தொழுதெழுங்
கடையுயர் மாடமார்கழுமலவளநகர்ப்
பெடையனநடையொடும் பெருந்தகையிருந்ததே.
—சம்பந்தர். 88.

செங்காட்டங்குடி. திருத்தாண்டகம்.

பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக்கத்தை பேணி
நினைந்தெழுவார் தம்மனத்தேமன்னி
யிருந்தமணி விளக்கதனை நின்றபூமே லெழுந்தருளி
யிருந்தானை யெண்டோள்வீசி
யருந்திறன்மா நடமாடுமெம்மான்றன்னை யங்கனகச்
சுடர்க்குன்றை யன்றாலின் கீழ்
திருந்துமறைப்பொருணால்வர்க் கருள் செய்தானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேனே.
—அப்பர். 89.

திருமேற்றளி. பண்-நட்டராகம்.

நானே னுன்னடியே நினைந்தே னினைதலுமே
யூனாரிவ்வுடலம்புகுந்தாயென்னொளிச்சுடரே
தேனேயின்னமுதே திருமேற்றளியுறையுங்
கோனே யுன்னையல்லாற்குளிர்ந்தேத்தமாட்டேனே.

—சுந்தரர். 90.

பாம்புரம். பண்-தக்கராகம்.

மாலினுக்கன்று சக்கரமீந்து மலரவற்கொருமுக மொழித்தே
ஆலின்கீழறமோர் நால்வர்க்கருளியனலது வாடு மெம்மடிகள்
காலனைக் காய்ந்து தங்கழலடியாற் காமனைப்பொடி படநோக்கிப்
பாலனுக்கருள் செய்த வெம்மடிகள் பாம்புர நன்னக ராரே.

—சம்பந்தர். 91.

கோடிகா. திருநேரிசை.

ஏவடுசிலையினானேபுரமவையெரிசெய்தானே
மாவடுவகிர்கொள் கண்ணாள் மலைமகள்பாகத்தானே
ஆவடுதுறையுளானே யைவரலாட்டப்பட்டேன்
கோவடுகுற்றந்தீராய் கோடிகாவுடைய கோவே.

—அப்பர். 92.

ஆவடுதுறை. பண்-தக்கேசி.

கோதிலாவமுதேயருள் பெருகு கோலமே யிமையோர்
தொழுகோவே
பாதிமாதொருகூறுடையானே பசுபதீபரமாபரமேட்டி
தீதிலாமலையே திருவருள் சேர்சேவகா திருவாவடு
துறையு.
ளாதியே யென்னையஞ்சலென்றருளாயாரெனக்குற
வமரர்களேறே.
—சுந்தரர். 93

காரைக்காடு. பண்பஞ்சமம்.

அன்றாலின்கீழிருந்தங் கறம்புரிந்தவருளாளர்
குன்றாத வெஞ்சிலையிற் கோளரவநாண்கொளுவி
யொன்றாதார் புரமூன்றுமோங்கெரியில் வெந்தவிய
நின்றாருங் கலிக்கச்சி நெறிக்காரைக்காட்டாரே.
—சம்பந்தர். 94.

திருநேரிசை

காயமேகோயிலாகக் கடிமனமடிமையாக
வாய்மையே தூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும் பாலா நிறைய நீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப் போற்றவிக்காட்டினோமே.
—அப்பர். 95.

பண்-பழம்பஞ்சுரம்.

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப்பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே யழுந்தூரரசே கொழுநற்
கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப்படுவாய் பனங்காட்டூரானே
மாட்டூரறவா மறவாதுன்னைப் பாடப்பணியாயே.

—சுந்தரர். 96.

தூங்கானைமாடம். பண்-பழந்தக்கராகம்.

பன்னீர்மைகுன்றிச் செவிகேட்பில் படர்நோக்கிற்
கண்பவளங்நிற
நன்னீர்மைகுன்றித்திரைதோலொடு நரைதோன்றுங்
காலநமக்காதன்முன்
பொன்னீர்மைதுன்றப் புறந்தோன்று நற்புனல்
பொதிந்த புன்சடையினுருறையுந்
தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை
மாடந்தொழுமின்களே.

சம்பந்தர். 97.

மறைக்காடு. திருத்தாண்டகம்.

தூண்டு சுடரனையசோதிகண்டாய் தொல்லமரர்
சூழாமணிதான்கண்டாய்
காண்டற்கரிய கடவுள்கண்டாய் கருதுவார்க்காற்ற
வெளியான்கண்டாய்
வேண்டுவார்வேண்டுவதேயீவான்கண்டாய் மெய்
நெறிகண்டாய் விரதமெல்லா
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய் மறைக்
காட்டுறையுமணாளன்றானே.

—அப்பர். 98.

காஞ்சீபுரம். பண் தக்கேசி.

உற்றவர்க்குதவும் பெருமானையூர்வதொன்றுடை
யானை உம்பர்கோனை
பற்றினார்க்கென்றும் பற்றவன் றன்னைப் பாவிப்பார்
மனம் பாவிக்கொண்டானை
யற்றமில் புகழாளுமை நங்கையாதரித்து வழிபடப்
பெற்ற
கற்றைவார் சடைக் கம்பனெம்மானைக் காணக்
கண்ணடியேன் பெற்றவாறே.

—சுந்தரர். 99.

பண்-கௌசிகம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண் புனல்வேந்தனு மோங்குக
ஆழ்கதீய தெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

—சம்பந்தர். 100.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS

பாட்டு முதற் குறிப்பகராதி.

	செய்யுள் எண்.
அ.	
அங்கத்தை ...	80
அஞ்சியாகிலும் ...	86
அடைவிலோ ...	88
அந்தணாள் ...	42
அநதியுநண் ...	57
அரவினவாயின ...	7
அரியானை ...	2
அருத்தமதாவது ...	16
அன்றாலின ...	94
அனலம்பாலிக்கும்	14
ஆ.	
ஆடினாய் ...	67
ஆலைகிப் ...	26
ஆலந்தாருக ...	48
ஆறுடைசடை ...	25
இ.	
இடரினுந் ...	52
இடர்கெடுமா ...	59
இட்டணுமடி ...	30
இயககர்கி ...	36
இலைமலிந்த ...	66
இல்லகவிளக் ...	83
உ.	
உண்ணாமுலை ...	13
உம்பரார்கோனை ...	45
உருகுமனத் ...	77
உறறவாக்கு ...	99
ஊ.	
ஊன்மிசை ...	[illegible]
எ.	
எல்லையில் ...	69
எனபொடுகொம் ...	[illegible]
எனைபுண்ணிய ...	[illegible]
ஏ.	
ஏனழிந்த ...	22
ஏதநனனில ...	8
ஏதமிகக ...	[illegible]
ஏதுமொன்று ...	[illegible]
ஏவடுசிலை ...	[illegible]
ஏனவெண் ..	[illegible]
க.	
கங்காளர் ...	[illegible]
கடல்சூழ்ந்த ...	[illegible]
கண்ணாயே ...	[illegible]
கற்றிலாதானை ...	51
கா.	
காட்டேர் ..	66
காணவினியது .	[illegible]